# Thuvakudi Municipality

2024 - 2025

# துவாக்குடி நகராட்சி

## 2024-2025-ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

### 1) அமைப்பும் மேலாண்மை :

இந்நகராட்சி அரசாணை எண்: 277 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள்: 02.07.04 -ன்படி தேர்வுநிலை பேரூராட்சியிலிருந்து தரம் உயர்த்தப்பட்டு 05.7.2004- ம் தேதியிலிருந்து 3-ம் நிலை நகராட்சியாகவும், அரசாணை எண்.154 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 9.8.2010ன் படி 9.8.2010 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும் செயல்பட்டு வருகிறது. மேலும் இந்நகராட்சி துவாக்குடி, துவாக்குடிமலை ஆகிய இரு பகுதிகளை உள்ளடக்கியது.

துவாக்குடி நகராட்சி திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதியில் அடங்கியுள்ளது.

| | |
|---|---|
| 2011-ம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி மொத்த மக்கள் தொகை | : 38875. |
| 2022 -ம் ஆண்டின் புள்ளி விவரத்தின் படி மொத்த மக்கள் தொகை | : 44231. |

| | | | |
|---|---|---|---|
| அ) | நகரப்பரப்பளவு | : | 14.371 ச. கி. மீ. |
| ஆ) | மக்கள் தொகை | : | 38,875. |
| இ) | வார்டுகள் எண்ணிக்கை | : | 21 |
| ஈ) | நகராட்சியின் நிலை | : | இரண்டாம் நிலை |
| உ) | நகராட்சி எல்லைக்குள் அடங்கியுள்ள வருவாய் கிராமம் | : | எண் 84 - துவாக்குடி. |

**<u>நகர்மன்றம்</u>**

அரசு ஆணை எண்: 61 -ன் படி நகராட்சி பகுதி 21 வார்டுகளாக பிரிக்கப்பட்டு 19.02.2022 –ல் நகராட்சி மன்றத்தேர்தல் நடத்தப்பட்டது. 21 வார்டுகளில் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தாழ்த்தபட்ட பிரிவினருக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகள் 4,10,19 மற்றும் 20 என வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதில் தாழ்த்தப்பட்ட பிரிவு பெண்களுக்கு 19,20-வது வார்டும், மற்றும் 4,10 வார்டுகள் தாழ்த்தப்பட்ட பிரிவு பொது எனவும் மேலும் பெண்களுக்கு வார்டு எண் 1,5,6,7,11,14,15,16,18 என 9 வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, ஆக மொத்தம் இந்நகராட்சியில் பெண்களுக்கென 11 வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**2).ஆணையாளர் மற்றும் அலுவலர்கள்**

அறிக்கையாண்டில் திரு.இ.பட்டுசாமி, அவர்கள் இந்நகராட்சியில் ஆணையாளராக மற்றும் தனி அலுவலராக 01.04.2023 முதல் 31.03.2024 வரையிலும் ஆணையர் பணி பார்த்து வந்துள்ளார்கள் .

## பணியமைப்பு

| வ. எண். | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் எண்ணிக்கை | தற்போது பணிபுரியும் பணியாளர் எண்ணிக்கை | காலியிடம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி ஆணையர் | 1 | 1 | 0 |
| 2 | நகராட்சி பொறியாளர் | 1 | 1 | 0 |
| 3 | பொதுப்பணி மேற¦பார்வையாளர் | 1 | 1 | 0 |
| 4 | மேலாளர் | 1 | 1 | 0 |
| 5 | உதவியாளர் | | 1 | 1 |
| 6 | இளநிலை உதவியாளர் | 3 | 3 | 0 |
| 7 | சுகாதார ஆய¦வர் | 1 | 1 | 0 |
| 8 | நகரமைப்பு ஆய¦வர் | 1 | 0 | 1 |
| 9 | வருவாய் ஆய்வர் | 1 | 1 | 0 |
| 10 | வருவாய் உதவியாளர் | 2 | 2 | 0 |
| 11 | பணி ஆய்வர் | | 1 | 0 |
| 12 | பதிவறை எழுத்தர் | 1 | 1 | 0 |
| 13 | அலுவலக உதவியாளர் | 1 | 1 | 0 |
| 14 | ஓட்டுநர் | 1 | 1 | 0 |
| 15 | பொது சுகாதார பணியாளர்கள் | 23 | 21 | 2 |

3) பொறியாளர் பிரிவு :

**இந்நகராட்சியில் திரு. விஜய் கார்த்தி, என்பவர் நகராட்சி பொறியாளர் பணியிடத்தில் 01.04.2022 முதல் 31.12.2022 வரையிலும் மற்றும் திரு.எம்.ஜெயகிருணணன் என்பவர் 01.01.2023 முதல் 31.03.2023 வரை நகராட்சி பொறியாளராக பணிபுரிந்து வருகிறார். இந்நகராட்சியின் பொதுபணி மேற்பார்வையாளராகதிருமதி. ப.சித்ரா என்பவர் 01.04.2022-ம் தேதி முதல் 31.03.2023 வரை பணிபுரிந்தார். மேலும் திருமதி ஆர். ரஞ்சனி என்பவர் பணி ஆய்வாளர் பணியிடத்தில் பணி புரிந்து வருகிறார்.**

**4).வருவாய் பிரிவு**

**அறிக்கை ஆண்டில் ஒரு வருவாய் ஆய்வர் திரு.தி.கார்த்திகேயன் 01.04.2022 முதல் பணிபுரிந்து வருகிறார் மற்றும் இரண்டு வருவாய் உதவியாளர்களுடன் 21 வார்டுகளின் வரி தொடர்பான பணிகளை செய்து வருகிறார்கள்.**

**5). நகரமைப்பு பிரிவு**

**இந்நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளர் பணியிடம் அரசாணை எண்.30 நாள் 13.02.2013ல் தோற்றுவிக்கப்பட்டு மேற்கண்ட நகரமைப்பு ஆய்வாளர் பணியிடத்தில் அறிக்கை ஆண்டில் திரு.ஆர்.அன்பழகன், என்பவர் பணிபுரிந்துள்ளார்.**

**6). பொது சுகாதார பிரிவு**

**அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியில் துப்புரவு ஆய்வாளர் பணியிடத்தில் திரு. எம்.அய்யப்பன், என்பவர் பணிபுரிந்துள்ளார்.**

**போக்குவரத்துக்கள் :**

**சாலைகள் மற்றும் பாலங்கள்**

**அ) இந்நகராட்சி வழியாகச் செல்லும் தேசியநெடுஞ்சாலை : நாகப்பட்டினம் முதல் கோயம்புத்துர் வரை நான்கு வழிச்சாலையில் துவாக்குடி நகராட்சி எல்லையில் தேசிய நெடுங்சாலைத்துறை ஆணையத்தால் 5 கி.மீ நீளத்திற்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.**

**ஆ) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட இதர மாவட்ட சாலைகள் 2 கி.மீ நீளத்திற்கு மாநில நெடுஞ்சாலை துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது.**

**(இ) துவாக்குடி நகராட்சி பராமரிப்பில் உள்ள அனைத்து சாலைகளும் தற்போது நகராட்சியால் திருப்திகரமாக பராமரிக்கப்பட்டு வருகிறது.**

<u>நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளின் விபரம்</u>

| | | | |
|---|---|---|---|
| அ) | சிமெண்ட் சாலைகள் | : | 23.67 CC |
| ஆ) | தார் சாலைகள் | : | 36.12 BT |
| இ) | மண் சாலைகள் | : | 0.77 EARTHERN |
| ஈ) | WBM | : | 0.447 |

**2021-22 முதல் 2023-24ம் ஆண்டு முடிவுற்ற திட்டப்பணிகள் விவரம்**

- கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021-22ம் ஆண்டு ரூ.263.40 இலட்சம் மதிப்பீட்டில் 2.478 கி.மீ. நீளத்திற்கு 2 சிப்பம் சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.
- கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021-22ம் ஆண்டு ரூ.275.00 இலட்சம் மதிப்பீட்டில் உடையான் குளம் மற்றும் மடத்தான் குளம் மேம்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.
- நமக்கு நாமே திட்டம் 2021-22ன் கீழ் ரூ.72.00 இலட்சம் மதிப்பீட்டில் நூலகம் அமைக்கும் பணி மற்றும் சிறு உயர் மின்கோபுரவிளக்கு அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.
- சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22ன் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் என்.ஜி.ஓ காலணி பகுதியில் அங்கன்வாடி மையம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.
- 15-வது நிதிக்குழு மான்யம் (Tied) 2021-22ம் ஆண்டு ரூ.78.00 இலட்சம் மதிப்பீட்டில் 2 திடக்கழிவு மேலாண்மை பணிகள், 4 குடிநீர் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.
- 15-வது நிதிக்குழு மான்யம் (Un-tied) 2021-22ம் ஆண்டு ரூ.52.00 இலட்சம் மதிப்பீட்டில் 3 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.
- அம்ரூத் 2.0 2022-23 திட்டத்தின் கீழ் ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் அய்யப்பா நகர் பகுதியில் பூங்கா மேம்படுத்தும் பணி முடிக்கப்பட்டுள்ளது.
- நமக்கு நாமே திட்டம் 2022-23ன் கீழ் ரூ.36.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசு பள்ளி கட்டிடம் புதுப்பிக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.
- 15-வது நிதிக்குழு மான்யம் (Tied) 2022-23ம் ஆண்டு ரூ.76.86 இலட்சம் மதிப்பீட்டில் 2 திடக்கழிவு மேலாண்மை பணிகள், 2 குடிநீர் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.
- 15-வது நிதிக்குழு மான்யம் (Un-tied) 2022-23ம் ஆண்டு ரூ.54.00 இலட்சம் மதிப்பீட்டில் 3 சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.
- தூய்மை இந்தியா திட்டம் (U) 2023-24ன் கீழ் ரூ.43.25 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் ஊர்தி வாகனம் கொள்முதல் செய்யும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

## *2024-25*-ம் ஆண்டு நடைபெற்று வரும் திட்டப்பணிகள் விவரம்

- அம்ரூத் *2.0* திட்டத்தின் கீழ் ரூ.*2135.00* இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி பகுதியில் குடிநீர் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருகிறது.
- பொதுநிதி *2021-22*ன் கீழ் ரூ.*150.00* இலட்சம் மதிப்பீட்டில் திருச்சி தஞ்சை தேசிய நெடுஞ்சாலை பகுதியில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- மாநில நிதிக்குழு மான்யம் *(SFC-School Improvement Scheme) 2022-23* ன் கீழ் ரூ.*125.00* இலட்சம் மதிப்பீட்டில் ராவுத்தான் மேடு அரசு தொடக்கப்பள்ளியில் *4 + 4* வகுப்பறைகள் தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் கழிப்பறை வசதியுடன் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- *15*-வது நிதிக்குழு மான்யம் *(Un-Tied) 2023-24*ம் ஆண்டு ரூ.*86.00* இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.
- *15*-வது நிதிக்குழு மான்யம் *(Un-Tied) 2024-25*ம் ஆண்டு ரூ.*94.00* இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.
- தூய்மை இந்தியா திட்டம் *(U) 2023-24*ன் கீழ் ரூ.*872.00* இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் *(STP cum FSTP)* அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**6) (அ) உயர் நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் :**

நகராட்சியினால் பள்ளிகள் ஏதும் பராமரிக்கபபடவில்லை, இந்நகராட்சி எல்லையில் கீழ்கண்ட பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் இயங்கி வருகின்றன.

1) ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, துவாக்குடிமலை
2) ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, துவாக்குடி
3) ஆர்.இ.சி நடுநிலைப்பள்ளி, துவாக்குடி
4) அரசினர் மேல்நிலைப்பள்ளி, துவாக்குடி
5) அரசு கலைக்கல்லூரி, துவாக்குடிமலை
6) அரசு தொழில் நுட்ப கல்லூரி.
7) தேசிய தொழிற்நுட்ப பயிலகம்.
8) உணவு கலைக் கல்லூரி.

## (ஆ) தனியார் பள்ளிகள்

1) குழந்தை ஏசு மேல்நிலைப்பள்ளி (மகளிர்) துவாக்குடிமலை
2) சாரதா துவக்கப்பள்ளி, காமராஜபுரம்
3) விவேகானந்தா துவக்கப்பள்ளி, காமராஜபுரம்
4) செயின்ட் ஜோசப் மெட்ரிகுலேசன் பள்ளி, துவாக்குடிமலை.

**7). விழாக்கள் / உழவர் சந்தை**

அறிக்கை ஆண்டில் உள்ளூர் திருவிழாக்கள் வழக்கம் போல் நடைப்பெற்று வருகிறது, இந்நகராட்சியில் வாரச்சந்தை ஏதும் நடைப்பெறவில்லை, உழவர் சந்தை நடைபெறுகிறது

**8). தண்ணீர் வசதி**

இந்நகராட்சியில் கொள்ளிடம் கூட்டுக்குடிநீர் திட்ட செயல்பாட்டில் நான்கு குடிநீர் விநியோக மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மூலம் குடிநீர் நாள் ஒன்றுக்கு 30.00 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இவற்றுடன் 18 எண்ணிக்கை கைபம்புகள், 71 எண்ணிக்கை மின்விசையுடன் கூடிய ஆழ்குழாய் கிணறுகள் மூலம் 0.38 ஆடுனு தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மொத்தம் 3.38 ஆடுனு குடிநீர் மேற்கண்ட குடிநீர் ஆதாரங்கள் மூலமாக நபர் ஒருவருக்கு நாள் தோறும் 87 டுஞஊனு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| பொது குழாய்கள் | - | 75 |
| வீட்டுக்குழாய் இணைப்புகள் | - | 4417 |

**9). பாதாள சாக்கடை**

இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் ஏதும் இல்லை.

**10). மழை நீர் வடிகால்கள்**

இந்நகராட்சியில் கழிவுநீர் வடிகால் பக்கா (27.32கி.மீ), கச்சா (0.62கி.மீ), நகராட்சியின் சுகாதார முறையில் பராமரிப்பில் உள்ளன.

இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள சாலைகள் நகராட்சியினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு நில அளவை செய்யப்பட்டு வருகிறது. பாலங்கள், ஆற்றோடை பாதைகள், மதகுகள் ஆகியவை இல்லை ஏனெனில் நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைப் பகுதிகளில் ஆறுகள் ஏதும் குறுக்கிடவில்லை. நகராட்சி எல்லைப்பகுதியில் ஆறுகள் ஏதும் செல்லவில்லை.

**11). தெருவிளக்கு வசதி**

அறிக்கை ஆண்டில் பராமரிக்கப்பட்டு வரும் விளக்குகளின் மொத்த எண்ணிக்கை விபரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | 40 W LED Light | - | 1 | எண்ணிக்கை |
| 2. | 120 W LED Light | - | 540 | எண்ணிக்கை |
| 3. | 72 W LED Light | - | 69 | எண்ணிக்கை |
| 4. | 48 W LED Light | - | 305 | எண்ணிக்கை |
| 5. | 20 W LED Light | - | 638 | எண்ணிக்கை |
| 6. | 200 W LED Light | - | 3 | எண்ணிக்கை |
| 7. | 60 W LED Light | - | 6 | எண்ணிக்கை |
| | மொத்தம் | - | 1562 | |

அறிக்கை ஆண்டில் தெருவிளக்கு பராமரிப்பு செலவு ரூ. 13.19 லட்சமும், மற்றும் தெருவிளக்கு மின கட்டணமாக ரூ. 23.48 லட்சமும் செலவிடப் பட்டுள்ளது.

**12). பொது நலம் மருத்துவ உதவி**

இந்நகராட்சி எல்லைக்குள் 3 தனியார் மருத்துவமனையும் 1 மற்றும் அரசு மருத்துவமனையும் 2 அரசு உதவி பெறும் தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகமும் அரசு மருத்துவமனையும் ( பாரத மிகு மின் நிறுவன மருத்துவமனை BHEL Hospital) உள்ளன. அரசு மருத்துவமனைகளும் உள்ளன.

தனியார் மருத்துவமனைகளின் விபரம்

1. நஷீர் மருத்துவமனை.
2. ஐஸ்வர்யா, மெடிக்கல் சென்டர்.
3. சுக்ருதீன் மருத்துவமனை.

அரசு மருத்துவமனைகளின் விபரம்

1. இந்நகராட்சி பகுதியில¦ 01.07.2014 முதல் அரசு மருத்துவமனை இயங்கி வருகிறது. இது தற¦போது விரிவுப்படுத்தப்பட்டு 32 படுக்கைகள¦ கூடுதலாக நிறுவி செயல¦பட்டு வருகிறது. நகராட்சி மூலம் மருத்துவமனைகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.
2. இ.எஸ்.ஐ மிஷன் மருத்துவமனை. (அரசு உதவி பெறும் மருத்துவமனை)
3. சி.எஸ்.ஐ மிஷன் மருத்துவமனை. (அரசு உதவி பெறும் மருத்துவமனை)

**13). பொது சுகாதாரம்**

இந்நகராட்சியில் சுகாதார ஆய்வாளர் பணியிடத்தில் திரு.எம்.ஐயப்பன் என்பவர் பணிபுரிந்து வருகிறார், பொது சுகாதார பிரிவில் மொத்த தூய்மை பணியிடங்களின் எண்ணிக்கை 23 அதில் தற்போது 21 தூய்மை பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள் மற்றும் தனியார்மயம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 54 தூய்மை பணியாளர்கள் பொது சுகாதார பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு மற்றும் கொரோனா-19 தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**14). பிறப்பு விகிதமும் மகப்பேறு உதவியும்**

அறிக்கை ஆண்டில் பிறப்பு இறப்புகளை பதிவு செய்யும் பணி

அறிக்கை ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகள் 78 ஆகும். நகராட்சி நிர்வாகத்தின் கீழ் மகப்பேறு இல்லங்கள் பராமரிக்கப்படவில்லை. குழந்தைகள் காப்பகம் ஊராட்சி ஒன்றியம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

15). இறப்பு விகிதம் மற்றும் தொற்று நோய்கள்

1. அறிக்கையாண்டில் பதிவு செய்யப்பட்ட இறப்புகள் : 134
2. காலரா அம்மை போன்ற பல்வேறு நோய்கள் மூலம் இறப்புகள் ஏதும் இல்லை. மற்ற நோய்கள் மூலம் ஏற்பட்ட மரணம் குறித்த விளக்கம் கீழ்கண்டவாறு உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | காலரா | - | இல்லை |
| 2. | அம்மை | - | இல்லை |
| 3. | பிளேக் | - | இல்லை |
| 4. | மலேரியா | - | இல்லை |
| 5. | சீதபேதி | - | இல்லை |
| 6. | காய்ச்சல் | - | இல்லை |
| 7. | பிற மூச்சுவை நோய்கள் | - | இல்லை |
| 8. | பிற காரணங்களால் | - | 134 |
| 9. | வெறிநாய் கடியினால் | - | இல்லை |

கொசு ஒழிப்புத்திட்டம்.

இந்நகராட்சியில் பொது சுகாதார பணியாளர்களைக் கொண்டு தினமும் சுழற்சி முறையில் 1 முதல் 15 வார்டுகளுக்கும் கைத் தெளிப்பான் இயந்திரம் மூலம் கொசு மருந்து தெளித்து பொது சுகாதாரம் பராமரிக்கப்பட்டு வருகிறது. 16 முதல் 21 வார்டுகள் பாரதமிகுமின் நிறுவனம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் னுகூஷஊ 28 பணியாளரர்களை கொண்டு (னுடிஅநளவைஉ கூஷசநயனைபே ஊாநஉமநச) டெங்கு ஒழிப்பு மற்றும் தடுப்பு பணிகள் பார்த்து வருகின்றனர். டெங்கு கொசுப்புழு ஒழிப்பு மற்றும் டெங்க நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**16). கொக்கிப்புழு, பிளேக்**

அறிக்கை ஆண்டில் இந்நோயால் யாரும் பாதிக்கப்படவில்லை.

**17). நோய் தடுப்புத்திட்டம்**

குழந்தைகளுக்கு சொட்டு மருந்து பொது சுகாதாரம் மற¦றும் நோய¦ தடுப்புத்துறை மூலம் வழங¦கப்பட்டு வருகிறது. வருடந்தோறும் பள்ளிகளுக்கான வாழ்வொளித்திட்டம் மூலம் மாணவ மாணவியர்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

**18). குடும்ப நலத்திட்டம்**

குடும்ப நலத்திட்டத்திற்கென அலுவலர் எவரும் தனியாக நியமனம் செய்யப்படவில்லை. விரிவு படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் மூலம் குடும்ப நலத்திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

**19). சிறுசேமிப்பு**

சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவரால் இந்நகராட்சிக்கு இலக்குகள் நிர்ணயம் செய்யப்படவில்லை.

**20). பொது சுகாதாரம்**

அறிக்கை ஆண்டில் 15 சமுதாயக் கழிவறைகள் 4 பொது கழிவறைகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. காலை மாலை இருவேளை தெருக்கள் கூட்டி சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் வீடு தோறும் நகராட்சி தூய்மை

பணியாளர்கள் மூலம் நேரடியாக உலர், ஈரக்கழிவுகள் தனித்தனியாக பிரித்து பெறப்பட்டு வருகிறது. அவ்வாறு பெறப்படும் குப்பைகள் நகராட்சியிலுள்ள 14 பேட்டரி வண்டிகள் மற்றும் டிப்பர்லாரி டம்பர் பிளேசர் மற்றும் TATA ACE வாகனம் மூலம் சேகரிக்கப்பட்டு வருகிறது.

**21). வீட்டு கழிப்பறைகள்**

அ) நகரில் மொத்த குடியிருப்புகள் 10894 இதில் கழிப்பிடங்கள் உள்ள குடியிருப்பு 10252 ஆகும்.

ஆ) கழிவறைகள் இல்லாத வீடுகளில் வசிப்பவர்கள் நகராட்சியினால் பராமரிக்கப்படும் சமுதாய கழிப்பிடங்களை கட்டணமின்றி பயன்படுத்தி வருகின்றனர்.

இ) தூய்மை பணியாளர்கள் துப்புரவு பணிகளை செவ்வனே செய்து வருகிறார்கள்.

ஈ) துணை இயக்குநர் பொதுசுகாதாரம், திருச்சி அவர்கள் மூலம் யானைக்கால் நோய் ஒழிப்புத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகரில் கொசு உற்பத்தியினை குறைக்க அவ்வப்போது கொசு மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது.

உ) இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 1056 தனி நபர் கழிப்பிடங்கள் கட்ட குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 1056 கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

**22). கலவை உரம்**

இந்நகராட்சியில் 1 நுண் உரம் தயாரிக்கும் மையம் (MCC), கலவை உரம் தயாரிப்பதற்கு Onside Composing Centre-3 இயங்கி வருகின்றது. மேலும், ராவுத்தான்மேடு எம்.டி சாலை மற்றும் மேலத் தெருவில் இயங்கும் Onside Composing Centre மூலம் மக்கும் குப்பைகளைக் கொண்டு உரம் தயாரிக்கப்படுகிறுது. முன்னதாக அனைத்து வீடுகளிலும் மக்கும் குப்பை மற்றும் மக்காத என தரம் பிரித்து தூய்மை பணியாளர்களால் சேகரிக்கப்படுகிறது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட ஈரக்கழிவுகள் எம்.டி சாலை, ராவுத்தான்மேடு மற்றும் மேலத்தெரு ஆகிய இடங்களில் இயங்கும் நுண்உரக்கூடம் மூலம் நவீன முறையில் கையாளப்பட்டு நுண் உரங்களாக மாற்றப்படுகின்றன. இவ்வுரங்கள் அனைத்தும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

**23). அச்சம் , அருவருக்கத்தக்க மற்றும் அபாயகராமான தொழில் உரிமம் (D&O and Trade License)**

1920 ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 249 பிரிவின் படி துவாக்குடி நகராட்சியில் அச்சம், அருவருக்கத்தக்க மற்றும் அபாயகரமான தொழில் உரிம கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது..

**24). தீயணைப்பு நிலையம்**

இந்நகராட்சி பகுதியில் உள்ள பாரதமிகு மின் நிறுவன வளாகத்தில் தீயணைப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது.

**25). போக்குவரத்து**

தமிழ¦நாடு அரசு போக்குவரத்து கழகங்கள¦ மற¦றும் தனியார் நிறுவனங்கள¦ மூலம் பேருந்துகள¦ இயக்கப்படுகின¦றன.

**26). சந்தைகள், இருசக்கர வாகன நிறுத்துமிடம்**

துவாக்குடி நகராட்சிக்கு சொந்தமாக சந்தை மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் இல்லை.

**27). பேருந்து நிலையம்**

துவாக்குடி நகராட்சிக்கு சொந்தமாக பேருந்து நிலையம் ஏதும் இல்லை.

**28). வாடகை உந்து நிலையம் (சைக்கிள் ரிக்ஷா மற¦றும் வண்டி ஸ்டாண்டுகள்)**

வாடகை உந்துநிலையம் இந்நகராட்சியில் பராமரிக்கப்படவில்லை.

**29). சாலையோர மரங்கள்**

இந்நகராட்சியால் பராமரிக்கப்படும் சாலைகளின் இருபுறங்களிலும் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

**30). விரிவு மேம்பாட்டுத்திட்டம்**

இத்தலைப்பின் கீழ் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை

**31). வரை கடப்புகள்**

இந்நகராட்சி பகுதி நில அளவை செய்யப்படவில்லை. நில அளவை மேற் கொள்ள சர்வே துறையினருக்கு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது, விரைவில் நில அளவை செய்யப்படவுள்ளது. சென்னை-5 நில அளவை மற்றும் நிலவரி திட்ட இயக்குநரின் கடிதம் ந.க.கே4/32307/2018 (நி.அ.) நாள் 23.06.20 கடிதத்தின்படி நில அளவை பணிகள் துவங்க நடவடிக்கையில் உள்ளது.

**32). தொழிற்பகுதியாக அறிவித்தல்**

இந்நகராட்சி பகுதியில் பாரதமிகு மின் நிறுவனம் இயங¦கி வருகிறது. இந்நிறுவனத்தில¦ சுமார் 20000 நபர்கள் பணிபுரிந்து வருகிறார்கள், இந்நிறுவனத்தின் மூலம் சொத்து வரி மற்றும் மூன¦றில¦ ஒரு பங¦கு தொழில்வரி நகராட்சிக்கு வருவாயாக பெறப்பட்டு வருகிறது, இது தவிர சிட்கோ தொழில்பேட்டை பகுதியில் தோராயமாக 156 கம்பெனிகள் உள்ளன அதில் 41 கம்பெனிகள் இயங்கி வருகின்றன. மொத்த மக்கள் தொகையில் 50ரூ பேர் விவசாயிகள் ஆவர்.
மக்கள் தொகையில் நபர் ஒன்றுக்கு வருமானம் கீழ்கண்டவாறு உள்ளது.

1. சொத்துவரி - 140 ரூ
2. தொழில்வரி - 15 ரூ

அறிக்கையாண்டில் 90 எண்ணம் புதியதாக வரி விதிக்கப்பட்டு நடப்பு ஆண்டிலேயே வசூல் செய்யப்பட்டுள்ளது, இதில் வரி திருத்தம் செய்யப்பட்ட சொத்துவரியும் அடங்கும்.

**33) வரியினங்கள் -**

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்¦கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

சொத்துவரி:

குடியிருப்பு கட்டிடங்¦கள்(Residencial Building) :

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | ரூ.1.25 |
| 601-1200 | ரூ.1.5 |
| 1201-1800 | ரூ.1.75 |
| >1800 | ரூ.2 |

குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள்(Non Residencial Building) :

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | ரூ.1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டிடங்¦கள் | ரூ.2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | ரூ.1.75 |

மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 25ரூ சொத்துவரி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50ரூ சொத்துவரி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 75ரூ சொத்துவரி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100ரூ சொத்துவரி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100ரூ சொத்துவரி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டிடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்¦களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75ரூ சொத்துவரி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

**34. காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டிடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்¦கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது.

தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 ரூ உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட்டுள்ளது.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81-A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ளபட்டுள்ளது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

5) வணிகப் பயன்பாட்டுக் கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டிடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட்டுள்ளது.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் **Gross State Domestic Product(GSDP)** சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம். மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கு கீழ்கண்டவாறு மண்டலங்¦கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**35). முடிவுரை**

இந்நகர மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர்வசதி , பொது சுகாதார வசதி, சாலை வசதி மற்றும் மின்விளக்கு வசதிகள் அனைத்தும் தொய்வு இல்லாமல் வழங்க இந்நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு பொது மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் வகையில் இந்நகராட்சியால் சமர்பிக்கப்படும் கருத்துருக்களை ஏற்று நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்த துவாக்குடி நகராட்சி நகர்மன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்து இந்நிர்வாக அறிக்கையை முடிக்கிறேன்.

**ஆணையர்,**
**துவாக்குடி நகராட்சி.**